உருவாக்குவதற்கு இப்போது நம்முடைய நிதியாதாரம் ஏற்க முடியாத ஒரு நிலையில் இருக்கிறது. ஆகவே, நிதி நிலையைக் கருத்தில் கொண்டு இப்போது சுமார் 10 கோடி ரூபாயை உடனடியாகச் செலவு செய்து ஒரு பாலிடெக்னிக் தொடங்குகின்ற கருத்துருவானது அரசினுடைய ஆலோசனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 97, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.*

97—

ஆக்கிரமிப்பு

***18064—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரவாயல் பேரூராட்சிக்குட்பட்ட 8-வது வார்டிலுள்ள சக்கரபாணி நகரில் தொண்டை மண்டல ஆதீனத்திற்குச் சொந்தமான ஞானப்பிரகாச மடம் சர்வே எண் 322-இல் இருக்கும் இடத்தை சில தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து, சட்டத்திற்குப் புறம்பாக குடியிருப்பு மனைகள் போட்டு வீடு கட்டி வருவதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

காஞ்சிபுரம் நகர், தொண்டை மண்டல ஆதீனம், அருள்மிகு ஞானப்பிரகாச சுவாமிகள் மடத்திற்குச் சொந்தமான சென்னை, பூந்தமல்லி அருகில் உள்ள மதுரவாயல் கிராமத்தில் உள்ள சர்வே எண் 322-இல் 1 ஏக்கர் 50 சென்ட் நஞ்சை நிலம் திடீரென சட்டத்திற்குப் புறம்பாக ஒரு சிலர் ஆக்கிரமித்து விற்பனை செய்ய முயற்சி மேற்கொள்வதாக அறிந்து ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்குத் தேவையான அனைத்து சட்டபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2002 ஏப்ரல் 5]

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம், தொண்டை மண்டல ஆதீனத்திற்குச் சொந்தமான, சென்னை, மதுரவாயலில் உள்ள 1 ஏக்கர் 50 செண்ட் நஞ்சை நிலத்தை சிலர் ஆக்கிரமித்திருப்பதாக இந்த அவைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு சட்டபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க அறிவுறுத்தப் பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள். இந்த இடத்தை கடந்த 5-3-2002 அன்று மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு வந்ததற்குப் பிறகு, இப்போது ஆக்கிரமிப்பாளர்கள் அதிகரித்திருக்கிறார்கள் என்பதையும், கடந்த 1993 ஆம் ஆண்டு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருந்தபோது, இந்த இடமானது அரசாங்கத்தின் உபயோகத்திற்குத் தேவை என்று அன்று நிலத்தை கையகப்படுத்தியிருக்கிறது. அப்படியிருக்கும்போது, பின்னால் வந்த ஒருசில ஆட்சியாளர்களின் உதவியோடு, இந்த நிலத்தை பிளாட் போட்டு விற்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இந்து அறநிலையத் துறை சட்டம் 1958, பிரிவு 78-ன்கீழ் அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த இடத்தை நானும் நேரிலே சென்று பார்வையிட்டு, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே சொல்லியிருக்கிறேன். சம்பந்தப்பட்ட தாசில்தார், வி.ஏ.ஓ., ஆகியோரை அங்கே நேரிலே அழைத்துச் சென்று பார்த்தோம். பார்க்கின்ற நேரத்தில், அங்கே விற்பனை மூலம் திருவாளர்கள் எம்.கே. சேகர், சுந்தரமூர்த்தி, எம்.கே. ஏழுமலை மற்றும் மாரியப்பன் என்பவர்கள் பெற்றதின் வாயிலாக பல்வேறு நபர்களால் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளதை நேரிலே பார்த்தோம். உடனடியாக அதை நிறுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், வழக்கு நிலுவையில் உள்ளது. மீறி ஆக்கிரமிப்பு செய்திருந்தால் நேரடியாக மீண்டும் பார்வையிட்டு, ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக இந்த அரசு

நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ம்மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி. கே. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில் தெய்வங்களுக்குக் காவல் தெய்வமாக விளங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இலட்சியம் காக்க, கோயில் சொத்துக்களை அபகரிக்கும் விஷயத்தில் அத்துமீறும் ஆக்கிரமிப்பாளர்களின் பிடியிலிருந்து, காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனத்திற்குச் சொந்தமான ரூபாய் ஒரு கோடிக்கும் அதிகமான மதிப்புள்ள இந்தச் சொத்தினை மீட்க, போர்க்கால அடிப்படையில் சட்டத்திருத்தம் கொண்டு வந்து, நில ஆக்கிரமிப்பு தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்குத் தொடர்ந்து, அந்த ஆக்கிரமிப்பாளர்களுக்கு தண்டனை பெற்றுத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆலயமும், கல்விச்சாலைகளும் நன்றாக இருந்தால்தான் ஓர் ஆட்சி நன்றாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலே, கூடியவிரைவில்- இங்கே மட்டுமல்ல இன்றைக்குச் சென்னையில் பல கோடி ரூபாய் சொத்துக்களைத் தனியார் வசதி படைத்தவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தச் சொத்துகள் அனைத்தும் கண்டறியப்பட்டு உடனடியாக அறநிலையத் துறையில் சேர்க்கப்படும். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 98, திரு. எஸ். மகாலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.